1969 மார்ச் 12]

திரு. சா. மெய்யப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு என்று இருப்பதை உபகேள்விக்கும் அது பொருந்தும் என்று மாற்ற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதியில் தெளிவாக இருக்கிறதே.

3. கவன ஈர்ப்பு.

மதுரை மாவட்டத்தில் மழையின்மையும், சில பகுதிகளைப் பஞ்சப்பகுதி களாக அறிவித்து நிவாரண வேலைகளை மேற்கொள்ளலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப்பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தை நிதி அமைச்சர் கவனத் திற்குக் கொண்டுவர திரு. பெ. மலைச்சாமி, மா. இராசாங்கம், திரு. கரு. சீமைச்சாமி, திரு. என்.எஸ். வி. சித்தன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத் திருக்கிறார்கள். திருவாளர்கள் மலைச்சாமி, இராசாங்கம், சீமைச்சாமி ஆகி யோர் இடத்தில் இல்லை. ஆதலால், இப்போது திரு. சித்தன் அவர்கள் அவருடைய அறிவிப்பை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டுவருவார்கள். மு.ப. 10-00

***திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டத்தில் குறிப்பாக உசிலம்பட்டி, திருமங்கலம், நிலக்கோட்டை ஆகிய பகுதிகளிலும், மற்றும் பெரியாறு, வைகை நீர்த்தேக்கங்கள் மூலம் பாசன வசதி பெறும் பகுதிகளிலும் மழை பொய்த்தமையால் அப் பகுதிகளைப் பஞ்சப் பகுதிகளாக அறிவித்து நிலவரியைத் தள்ளுபடி செய்தல், கடன்களை ஒத்திவைத்தல் போன்ற நிவாரண வேலைகளை மேற்கொள்ள வேண்டிய" அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு சட்டப்பேரவையின் 41-வது விதியின்கீழ் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் போதிய மழையில்லை. இதன் விளை வாக, பெரியாறு திட்டப்பகுதியில் குறிப்பிட்ட தேதிக்கு ஒரு திங்கள் முன்னதாகவே நீர் வழங்குவது நிறுத்தப்பட்டுவிட்டது. அதனால் பெரியாறு திட்டப்பகுதியின் கீழ் உள்ள இரு போகப் பயிர்ப் பகுதிகள் பாதிக்கப்பட்டன. இவ்வாறு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித் துள்ளார். பெரியாறு ஆயக்கட்டின் கீழ் எஞ்சியுள்ள பகுதியில் நிலைமை ஓரளவு சீராக உள்ளது. இங்குள்ள பயிர்கள் பெருமளவு காப்பாற்றப் பட்டுவிட்டன. நிலக்கோட்டை வட்டத்தில் நிலைமை மனநிறைவளிக்கத் தக்கதாக இருக்கிறது. ஏனெனில் இந்த வட்டத்தில் பெரும்பகுதி பெரியாறு ஆயக்கட்டில் இருந்து வருகிறது. உசிலம்பட்டி, திருமங்கலம் வட்டங் களில் உள்ள ஏரிகளுக்குப் போதிய அளவு நீர் வழங்கப்படாததால் ஆயக்கட்டில் பெரும்பகுதி தரிசாகவே விடப்பட்டுள்ளது. இந்தப் பகுதி களில் மாவட்ட ஆட்சித் தலைவர் சென்று பார்வையிட்டார். வரிவசூலிப் பதைப் பொதுவாகத் தள்ளிப்போட வேண்டிய அவசியம் இல்லை என்றும், 1376-இல் இருந்து 1378–வது பசலி ஆண்டு வரை சேர வேண்டி யுள்ள கடன் நிலுவைத் தொகைகளை மெதுவாக வசூலிக்கும் முறை மேற்கொள்ளப்பட்டால் அதுவே போதுமானது என்றும் அவர் கருது கிறார். ஆயினும் விளைச்சல் மிகவும் மோசமாக உள்ள நேர்வுகளில் பருவ காலத் தள்ளுபடி வழங்கவேண்டுமென்று வருவாய் கோட்ட அதிகாரிகளுக்கு அவர் உத்திரவிட்டுள்ளார். திண்டுக்கல், பெரியகுளம், உசிலம்பட்டி, ஆகிய கோட்டங்களில் குடிநீர்ப் பற்றுக்குறை நிலவுவதால், கிணறுகளை ஆழப்படுத்தும் பணியை மேற்கொள்ளும்படி ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி வழங்கி யுள்ளார். மேலும், இந்தப் பணியை நிறை வேற்றுவதற்கு ரூ. 3 லட்சம் செலவிட ஒப்புதல் அளிக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் விண்ணப்பம் செய்து கொண்டுள்ளார். இது குறித்து தேவையான ஆணைகள் கிராம

வளர்ச்சி உள்ளாட்சித் துறையில் பிறப்பிக்கப்படும். மதுரை மாவட்டத்தில் நிலைமை எவ்வாறுள்ளதென்பது பற்றி மேற்கொண்டும் ஓர் அறிக்கை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுரை வட்டத்தில் மழை இல்லை, பல பகுதி தரிசாகவிடப்பட்டிருக்கிறது. என்று சொன்னார். குடிதண்ணீருக்குக் கஷ்டம் இருப்பதை ஒப்புக் கொண்டார். இந்த ஆண்டு மாவட்டக் கலெக்டர் சுற்றுப் பயணம் செய்யும்போது கடன் வசூலை ஒத்திப் போடவேண்டும். நிலவரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். உடனடியாக பஞ்ச நிவாரண வேலைகளைத் துவக்க வேண்டுமென்றும் கோரினோம். இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதோடு கொள்முதல் என்ற பெயராலே ஒரு ஏக்கருக்குக் குறைவாக நிலம் உள்ளவர்களும், துன்பப் படுத்தப்படுகிறார்கள். அதை நிறுத்தவேண்டுமென்று கோரினோம், இவற்றை எல்லாம் நிறைவேற்றுவார்களா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : உறுப்பினருடைய உணர்ச்சியைப் பாராட்டுகிறேன். அவரே மழையில்லை என்கிறார், கொள்முதல் செய்கிறார்கள் என்கிறார். இப்படி ஒன்றுக்கொன்று முரணைச் சொல்கிறார். நான் முன்பும் சொல்லியிருக்கிறேன். ஒரு ஏக்கருக்குக் குறைவாக நிலம் உள்ளவர்களிடம் கொள்முதல் செய்யக்கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறோம். தவறாக நடந்துவிட்ட இடங்களில் கூட அதிகாரிகளை சமாதானம் கேட்டு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆகவே இதுபற்றி உறுப்பினருடைய உணர்ச்சியை மதித்து நடவடிக்கை எடுக்கப்படும். அதற்காகத்தான் விரிவான வேறு ஒரு அறிக்கை ஒன்றும் கேட்டிருக்கிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஒரு பக்கத்தில் மழையில்லை என்கிறார், இன்னொரு பக்கத்தில் கொள்முதல் செய்யப்படுவதாக முரணைச் சொல்கிறார் என்று அமைச்சர் சொன்னார். பம்புசெட்டு வைத்து நெல் விளைவித்த இடங்களில் தான் கொள்முதல் நெருக்கடி அதிகமாக இருக்கிறது. மேலும் பஞ்ச நிவாரண வேலைக்கு 3 லட்சம் என்பது போதவே போதாது. அதை அதிகப்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா ?

4. 1969-70-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 13—கல்வி.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

"கோரிக்கை எண் 13-கல்வி* என்ற தலைப்பின்கீழ் ரூ. 66,04,43,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

Thiru K. VINAYAKAM: Sir, to discuss the general policy and desirability of adopting a fixed educational policy including language problem, I move the cut motion standing in my name:

"That the allotment of Rs. 66,04,43,800 under Demand No. 13—Education—be reduced by Rs. 100."

* 90–116-ம் பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.